கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

முன்னிலை:– திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண்.1/2025**
அதன்
**அசல் வழக்கு எண்.50/2025**
( CNR No.TNTS01 001323 2025 )

1. திரவியம்
2. திரவியம்
3. ராமர்
4. திரவியம்
5. ஒப்பனையம்மாள்
6. பாக்கியத்தாய்
7. ராமர்
8. வேலுச்சாமி
9. மகேஸ்வரி
10. சண்முகராஜ்
11. மைனர் திருப்பதி

(ஷை மைனர் 11 ஆம் பிரதிவாதி தன் தகப்பனாரும், கார்டியனுமான 8 ஆம் பிரதிவாதி வேலுச்சாமி மூலமாக ) . . . மனுதாரர்கள் / 1, 4, 5, 9 முதல் 16 பிரதிவாதிகள்

..எதிர்..

1. கிருஷ்ணன்
2. கோபால்
3. திருமலை முருகன்
4. மாரியம்மாள்
5. ராஜம்மாள்
6. சண்முகையா
7. ராமர் . . . 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் / வாதிகள்

8. போத்தியாச்சி
9. பிச்சம்மாள்
10. மாரியப்பன்
11. அரசப்பன்
12. ராமர் . . . 8 முதல் 12 எதிர்மனுதாரர்கள்/ 2, 3, 6 முதல் 8 பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனுவானது கடந்த 07.04.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.தினேஷ் அவர்களும், 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பாண்டியராஜன் அவர்களும் முன்னிலையாகியுள்ள நிலையில், 8 முதல் 12 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பார்களாக தீர்மாணிக்கப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி முன்னிலையாகியுள்ள வழக்கறிஞர்கள் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், இரு தரப்பு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>உத்தரவு</u>

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 7 விதி 11 மற்றும் பிரிவு 151–ன் கீழ், அசல் வழக்கின் பிராதை நீக்கரவு செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்</u>**:–

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் 1, 4, 5, 9 முதல் 16 பிரதிவாதிகள். அசல் வழக்கானது பிராது 3 வதுதபசில் சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், பிராது 2 வது தபசில் சொத்தைப் பொறுத்து 13.11.2024 ஆம் தேதிய பாகவிடுதலை ஆவணமானது செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரியும் 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் 3 ஆம் வாதிக்கு 11 ஆம் பிரதிவாதியின் கணவரான பரமசிவம் என்பவர் கடந்த 30.03.2012 ஆம் தேதியன்று 1 வது தபசில் 3 வது அயிட்டச் சொத்தைப் பொறுத்து அவரது சகோதரியான லட்சுமி என்பவருடன் சேர்ந்து கிரைய ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதாகவும், 3 வது வாதியின் தாயாரான லெட்சுமி என்பவர் கடந்த 22.07.2015 ஆம் தேதியன்று பிராது 1 வது தபசில் 1, 2 அயிட்டச் சொத்துக்களில் அவரது பிரிவின்றி 7–ல் 1 பங்கு பாகத்தைப் பொறுத்து ஏற்பாடு ஆவணம் ஒன்றை பிறப்பித்துக் கொடுத்துள்ளதாகவும் பிராதில் விவரிக்கப்பட்டு மேற்படி 30.03.2012 மற்றும் 22.07.2015 தேதிய ஆவணங்கள் பிராதுடன் ஆவண எண்.4 மற்றும் 5 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களில், அவர்களது தகப்பனார் அரசப்ப கரையாளரின் பாகத்திற்கு கிடைத்து

அவரது பெயரில் பட்டா ஏற்பட்டு, அவர் அனுபவித்து வந்து பின்னர் வாரிசு முறைப்படி சகோதர சகோதரிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்களுக்கு உரிமைப்பட்டு, பின்னர் அவர்கள் குடும்பச் சொத்துக்களை வாய்மொழி பாகம் பிரித்துக் கொண்டதில் அவர்களது பாகத்திற்கு கிடைத்த சொத்துக்களைப் பொறுத்து மேற்படி ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதால், அரசப்ப காரையாளருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து ஏற்கனவே பாகம் ஆகிவிட்டது என்பது 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு ஆவணங்கள் மூலமே தெரியவருகிற நிலையில், மீண்டும் பாகம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ள தேவையற்ற ஒன்றாகும். மேலும் ஒரு சொத்தைப் பொறுத்து வாய்மொழியாகவோ, பதிவு ஆவணங்கள் மூலமோ, நீதிமன்றம் மூலமாகவோ பாகம் ஆகிவிட்ட நிலையில், அதை தரப்பினர்களும் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் மீண்டும் பாகம் கோர இயலாது என்பது சட்ட நிலைப்பாடாகும். எனவே 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு அசல் வழக்கை தாக்கல் செய்வதற்கு யாதொரு Locus Standi ம் கிடையாது. Right to sue ம் ஏற்படவில்லை. எனவே அசல் வழக்கின் பிராதை நீக்கரவு செய்யக்கோரி மனுதாரர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 1, 2 மற்றும் 4 முதல் 7 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. மனுதாரர்கள் பிராதை நீக்கரவு செய்ய கோரியுள்ள காரணங்கள் அனைத்தும் கட்டளை 7 விதி 11-ல் குறிப்பிட்டுள்ள சட்ட சங்கதிகளை உள்ளடக்கி கூறப்படவில்லை. மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அசல் வழக்கில் பதிலுறை தாக்கல் செய்து தாவா அசல் வழக்கினை மேல் நடத்தி வழக்கில் சாட்சியம் அளித்து நிரூபணம் செய்து விவாதம் செய்தால் மட்டுமே முடிவு செய்ய இயலும். எதிர்மனுதாரர்களை கஷ்டப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. 8 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பார்களாகி உள்ளனர்.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் "இம் மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

6. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

7. **பிரச்சனைக்கான தீர்வு:-**

இந்த மனுவின் மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அசல் வழக்கில் 1, 4, 5, 9 முதல் 16 பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கானது பிராது 3 வதுதபசில் சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், பிராது 2 வது தபசில் சொத்தைப் பொறுத்து 13.11.2024 ஆம் தேதிய பாகவிடுதலை ஆவணமானது செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரியும் 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கின் 3 ஆம் வாதிக்கு 11 ஆம் பிரதிவாதியின் கணவரான பரமசிவம் என்பவர் கடந்த 30.03.2012 ஆம் தேதியன்று 1 வது தபசில் 3 வது அயிட்டச் சொத்தைப் பொறுத்து அவரது சகோதரியான லட்சுமி என்பவருடன் சேர்ந்து கிரைய ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதாகவும், 3 வது வாதியின் தாயாரான லெட்சுமி என்பவர் கடந்த 22.07.2015 ஆம் தேதியன்று பிராது 1 வது தபசில் 1, 2 அயிட்டச் சொத்துக்களில் அவரது பிரிவின்றி 7-ல் 1 பங்கு பாகத்தைப் பொறுத்து ஏற்பாடு ஆவணம் ஒன்றை பிறப்பித்துக் கொடுத்துள்ளதாகவும் பிராதில் விவரிக்கப்பட்டு மேற்படி 30.03.2012 மற்றும் 22.07.2015 தேதிய ஆவணங்கள் பிராதுடன் ஆவண எண்.4 மற்றும் 5 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி ஆவணங்களில், அவர்களது தகப்பனார் அரசப்ப கரையாளரின் பாகத்திற்கு கிடைத்து அவரது பெயரில் பட்டா ஏற்பட்டு, அவர் அனுபவித்து வந்து பின்னர் வாரிசு முறைப்படி சகோதர சகோதரிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்களுக்கு உரிமைப்பட்டு, பின்னர் அவர்கள் குடும்பச் சொத்துக்களை வாய்மொழி பாகம் பிரித்துக் கொண்டதில் அவர்களது பாகத்திற்கு கிடைத்த சொத்துக்களைப் பொறுத்து மேற்படி ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதால், அரசப்ப காரையாளருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து ஏற்கனவே பாகம் ஆகிவிட்டது என்பது 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு ஆவணங்கள் மூலமே தெரியவருகிற நிலையில், மீண்டும் பாகம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ள தேவையற்ற ஒன்று என்றும், மேலும் ஒரு சொத்தைப் பொறுத்து வாய்மொழியாகவோ, பதிவு

ஆவணங்கள் மூலமோ, நீதிமன்றம் மூலமாகவோ பாகம் ஆகிவிட்ட நிலையில், அதை தரப்பினர்களும் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் மீண்டும் பாகம் கோர இயலாது என்பது சட்ட நிலைப்பாடாகும் என்றும், எனவே 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு அசல் வழக்கை தாக்கல் செய்வதற்கு யாதொரு Locus Standi ம் கிடையாது என்றும், Right to sue ம் ஏற்படவில்லை என்றும், எனவே அசல் வழக்கின் பிராதை நீக்கரவு செய்ய வேண்டியது அவசியமானது என்றும் வாதிட்டிருக்கிறார்.

8. 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர்கள் பிராதை நீக்கரவு செய்ய கோரியுள்ள காரணங்கள் அனைத்தும் கட்டளை 7 விதி 11-ல் குறிப்பிட்டுள்ள சட்ட சங்கதிகளை உள்ளடக்கி கூறப்படவில்லை என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அசல் வழக்கில் பதிலுறை தாக்கல் செய்து தாவா அசல் வழக்கினை மேல் நடத்தி வழக்கில் சாட்சியம் அளித்து நிரூபணம் செய்து விவாதம் செய்தால் மட்டுமே முடிவு செய்ய இயலும் என்றும், எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டிருக்கிறார்.

9. இம்மனுவின் மனுதாரர்கள் உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 7 விதி 11–ன் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார்கள். கட்டளை 7 விதி 11–ன் கீழ் கீழ்க்கண்ட காரணங்களுக்காக மட்டுமே பிராதை நிராகரிக்க இயலும்

(அ) ஒரு வழக்குமூலத்தையும் வெளிப்படுத்தாதவிடத்து

(ஆ) கோரப்பட்ட பரிகாரம் குறை மதிப்பீடு செய்யப்பட்டு நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டிய காலத்திற்குள் அம்மதிப்பீட்டைத் திருத்தும்படி நீதிமன்றத்தால் வேண்டுறுத்தப்பட்டிருந்து, வாதி அவ்வாறு செய்யத் தவறுகிறவிடத்து

(இ) கோரப்பட்ட பரிகாரம் உரியவாறு மதிப்பீடு செய்யப்பட்டு, ஆனால் வழக்குரையானது குறைவாக வில்லை ஒட்டப்பட்ட தாளின் மீது எழுதப்பட்டிருக்கிறவிடத்தும், நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டிய காலத்திற்குள் தேவைப்படும் முத்திரைத்தாளைக் கொடுக்கும்படி நீதிமன்றத்தால் வேண்டுறுத்தப்பட்டிருந்து வாதி அவ்வாறு செய்யத் தவறுகிறவிடத்தும்

(ஈ) உரிமை வழக்கானது சட்டம் எதனாலும் தடை செய்யப்பட்டிருப்பதாக வழக்குரையிலுள்ள உரையிலிருந்து தெரியவருகிறவிடத்து

(உ) இரட்டைப் படிகளில் தாக்கல் செய்யப்படாதிருக்கும்போது

(ஊ) வாதி, விதி 9 இன் வகையகங்களை கடைபிடிக்கத் தவறியிருக்கும்போது

மேற்கண்ட விதியின் அடிப்படையில் காணும்போது மனுதாரர்கள் தரப்பு பிரதான வாதமானது தபசில் சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரப்பட்டுள்ள நிலையில், வாதிகள் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 30.03.2012 மற்றும் 22.07.2015 தேதிய ஆவணங்களில், அவர்களது தகப்பனார் அரசப்ப கரையாளரின் பாகத்திற்கு கிடைத்து அவரது பெயரில் பட்டா ஏற்பட்டு, அவர் அனுபவித்து வந்து பின்னர் வாரிசு முறைப்படி சகோதர சகோதரிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்களுக்கு உரிமைப்பட்டு, பின்னர் அவர்கள் குடும்பச் சொத்துக்களை வாய்மொழி பாகம் பிரித்துக் கொண்டதில் அவர்களது பாகத்திற்கு கிடைத்த சொத்துக்களைப் பொறுத்து மேற்படி ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதால், அரசப்ப காரையாளருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து ஏற்கனவே பாகம் ஆகிவிட்டது என்பது 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு ஆவணங்கள் மூலமே தெரியவருகிற நிலையில், மீண்டும் பாகம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளது தேவையற்ற ஒன்றாகும் என்றும், எனவே 1 முதல் 7 எதிர்மனுதாரர்களுக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்குமூலம் கிடையாது என்பதும் ஆகும்.

10. அசல் வழக்கின் சங்கதிகளை மேற்படி உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 7 விதி 11–ன் படி ஒப்பிட்டு நோக்கையில், வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கான வழக்குமூலம் இல்லை என்பது மனுதாரர்கள் தரப்பில் தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. மேலும், நீதிமன்ற முத்திரைக் கட்டணம் தவறாக கட்டப்பட்டுள்ளதாகவும் மனுதாரர்கள் தரப்பில் தெளிவுபடுத்தப்படவில்லை. ஒரு சொத்தின் உரிமை, பாகப்பிரிவினை மற்றும் பாக விடுதலை ஆவணம் செல்லாது என்னும் கோரிக்கை ஆகிய சங்கதிகள் ஒரு வழக்கின் முழுமையான வழக்குமூலத்தை உருவாக்குபவை ஆகும். அசல் வழக்கு பிராது சங்கதிகளை ஆராயும்போது மேற்படி கோரிக்கைகளை உள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை முழுமையான விசாரணைக்குப் பின்னிட்டுத் தான் தீர்மானிக்க இயலும். மனுதாரர்கள் தரப்பில் விவாதிக்கப்படும் முன்பா காம் நடந்த சங்கதி மற்றும் வாய்மொழி பாகப்பிரிவினை

ஆகியவை சாட்சியங்கள், ஆவணங்கள் ஆகியவற்றின் மூலம் நிரூபிக்கப்பட வேண்டிய சங்கதிகள் ஆகும். உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 7 விதி 11–ன் கீழான இந்த மனுவில் அவற்றை தீர்மானிக்க இயலாது. மேலும், மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்படும் Locus Standi என்பது ஒரு mixed question of fact and law ஆகும். இதனை முழுமையான விசாரணைக்குப் பின்னர் தான் தீர்மானிக்க இயலும். அதுபோன்று மனுதாரர்கள் குறிப்பிடும் 30.03.2012 மற்றும் 22.07.2015 தேதிய ஆவணங்கள் உண்மையானவையா? செல்லுபடியாகக் கூடியவையா என்பது சாட்சியங்களின் மூலம் நிரூபிக்கப்பட வேண்டிய சங்கதியாகும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்நிலையில், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் **Dahiben Vs.. Arvindbhai Kalyanji Bhanusali (Gajra) Dead through Legal Representatives and others reported in (2020) 7 SCC 366,** என்ற வழக்கில் பிறப்பித்துள்ள முன்தீர்ப்பினை பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது

> *"23.2. The remedy under Order 7 Rule 11 is an independent and special remedy, wherein the court is empowered to summarily dismiss a suit at the threshold, without proceeding to record evidence, and conducting a trial, on the basis of the evidence adduced, if it is satisfied that the action should be terminated on any of the grounds contained in this provision.*
>
> *23.3. The underlying object of Order 7 Rule 11(a) is that if in a suit, no cause of action is disclosed, or the suit is barred by limitation under Rule 11(d), the court would not permit the plaintiff to unnecessarily protract the proceedings in the suit. In such a case, it would be necessary to put an end to the sham litigation, so that further judicial time is not wasted.*
>
> *23.4. In Azhar Hussain v. Rajiv Gandhi [Azhar Hussain v. Rajiv Gandhi, 1986 Supp SCC 315, followed in Manvendrasinhji Ranjitsinhji Jadeja v. Vijaykunverba, 1998 SCC OnLine Guj 281 : (1998) 2 GLH 823] this Court held that the whole purpose of conferment of powers under this provision is to ensure that a litigation which is meaningless, and bound to prove abortive, should not be permitted to waste judicial time of the court, in the following words : (SCC p. 324, para 12)*
>
> *"12. The whole purpose of conferment of such powers is to ensure that a litigation which is meaningless, and bound to prove abortive should not be permitted to occupy the time of the court, and exercise the mind of the*

*respondent. The sword of Damocles need not be kept hanging over his head unnecessarily without point or purpose. Even in an ordinary civil litigation, the court readily exercises the power to reject a plaint, if it does not disclose any cause of action."*

*23.5. The power conferred on the court to terminate a civil action is, however, a drastic one, and the conditions enumerated in Order 7 Rule 11 are required to be strictly adhered to.*

*23.6. Under Order 7 Rule 11, a duty is cast on the court to determine whether the plaint discloses a cause of action by scrutinising the averments in the plaint [Liverpool & London S.P. & I Assn. Ltd. v. M.V. Sea Success I, (2004) 9 SCC 512] , read in conjunction with the documents relied upon, or whether the suit is barred by any law.*

*23.8. Having regard to Order 7 Rule 14 CPC, the documents filed along with the plaint, are required to be taken into consideration for deciding the application under Order 7 Rule 11(a). When a document referred to in the plaint, forms the basis of the plaint, it should be treated as a part of the plaint.*

*23.9. In exercise of power under this provision, the court would determine if the assertions made in the plaint are contrary to statutory law, or judicial dicta, for deciding whether a case for rejecting the plaint at the threshold is made out.*

*23.10. At this stage, the pleas taken by the defendant in the written statement and application for rejection of the plaint on the merits, would be irrelevant, and cannot be adverted to, or taken into consideration. [Sopan Sukhdeo Sable v. Charity Commr., (2004) 3 SCC 137]*

*23.11. The test for exercising the power under Order 7 Rule 11 is that if the averments made in the plaint are taken in entirety, in conjunction with the documents relied upon, would the same result in a decree being passed. This test was laid down in Liverpool & London S.P. & I Assn. Ltd. v. M.V. Sea Success I [Liverpool & London S.P. & I Assn. Ltd. v. M.V. Sea Success I, (2004) 9 SCC 512] which reads as : (SCC p. 562, para 139)*

*"139. Whether a plaint discloses a cause of action or not is essentially a question of fact. But whether it does or does not must be found out from reading the plaint itself. For the said purpose, the averments made in the plaint in their entirety must be held to be correct. The test is as to whether if the averments made in the plaint are taken to be correct in their entirety, a decree would be passed."*

*23.12. In Hardesh Ores (P) Ltd. v. Hede & Co. [Hardesh Ores (P) Ltd. v.*

*Hede & Co., (2007) 5 SCC 614] the Court further held that it is not permissible to cull out a sentence or a passage, and to read it in isolation. It is the substance, and not merely the form, which has to be looked into. The plaint has to be construed as it stands, without addition or subtraction of words. If the allegations in the plaint prima facie show a cause of action, the court cannot embark upon an enquiry whether the allegations are true in fact. D. Ramachandran v. R.V. Janakiraman [D. Ramachandran v. R.V. Janakiraman, (1999) 3 SCC 267; See also Vijay Pratap Singh v. Dukh Haran Nath Singh, AIR 1962 SC 941].*

*23.13. If on a meaningful reading of the plaint, it is found that the suit is manifestly vexatious and without any merit, and does not disclose a right to sue, the court would be justified in exercising the power under Order 7 Rule 11 CPC.*

*23.14. The power under Order 7 Rule 11 CPC may be exercised by the court at any stage of the suit, either before registering the plaint, or after issuing summons to the defendant, or before conclusion of the trial, as held by this Court in the judgment of Saleem Bhai v. State of Maharashtra [Saleem Bhai v. State of Maharashtra, (2003) 1 SCC 557]. The plea that once issues are framed, the matter must necessarily go to trial was repelled by this Court in Azhar Hussain case [Azhar Hussain v. Rajiv Gandhi, 1986 Supp SCC 315, followed in Manvendrasinhji Ranjitsinhji Jadeja v. Vijaykunverba, 1998 SCC OnLine Guj 281 : (1998) 2 GLH 823] .*

*23.15. The provision of Order 7 Rule 11 is mandatory in nature. It states that the plaint "shall" be rejected if any of the grounds specified in clauses (a) to (e) are made out. If the court finds that the plaint does not disclose a cause of action, or that the suit is barred by any law, the court has no option, but to reject the plaint.*

மேற்படி முன்தீர்வின் அடிப்படையில் இவ்வழக்கு சங்கதிகளை பரிசீலிக்கையில் பிராதில் இந்த வழக்கின் 1ஆம் வாதிக்கு 3ஆம் தபசில் சொத்துக்களில் பிரிவினையின்றி 1/7 பங்கு பாகமும், 2 முதல் 7 வாதிகளுக்கு 1/7 பங்கு பாகமும் ஆக மொத்தம் வாதிகளுக்கு 3ஆம் தபசில் சொத்துக்களில் பிரிவின்றி 2/7 பங்கு பாகமும் இருந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் பிராது 3ஆம் தபசில் சொத்தின் சில பகுதிகளைப் பொறுத்து ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், அது எவ்விதத்திலும் வாதிகளின் உரிமையை பாதிக்காது என்றும், 3ஆம் தபசில் சொத்துக்கள் உபயவாதிகளின் கூட்டு உரிமை மற்றும் பாத்தியத்தில் இருந்து வருவதாகவும் கட்சி செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த மனுதாரர்கள் குறிப்பிடுவதுபோல் 3ஆம் தபசில் சொத்துக்களை தரப்பார்கள்

வாய்மொழியாக பாகம் செய்து கொண்டதாக கூறப்படும் எதிர்வாதமானது அசல் வழக்கின் முழு விசாரணைக்குப் பின்னரே தெரியவரும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே தற்போதைய சூழலில் வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதின் வழக்குமூலத்தின் அடிப்படையில் பார்க்கையில் இரு தரப்பிலும் சாட்சிய சான்றாவணங்கள் முன்னிட்டு வழக்கு நடத்த போதிய முகாந்திரம் இருப்பதாலும், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 7 விதி 11 –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் மனுதாரர்களின் இம்மனு சங்கதிகளை தீர்மானிக்க இயலாது என்றும், எனவே பிராதை நீக்கரவு செய்யக் கோரும் கோரிக்கையானது தற்போதைய சூழ்நிலையில் ஏற்கத்தக்கது அல்ல என்பதால், பிராதை நீக்கரவு செய்ய இயலாது என்றும், எனவே இந்த மனுவானது அனுமதிக்கக் கூடியதல்ல என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிவேரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2026.04.17 16:08:03 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**<u>இரு தரப்பு சாட்சி, சான்றாவணம்</u>**

இல்லை.

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2026.04.17 16:08:10 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

---

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி
இடைநிலை மனு எண்.1/2025
அதன்
அசல் வழக்கு எண்.50/2025
உத்தரவு (நேரிய)
நாள்: 17.04.2026

---